வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 01.04.2026 புதன்கிழமை இதழ் : 85 பக்கங்கள் : 08




## சமஷ்டிக் கொள்கையை கைவிடப்போவதில்லை!

### சிறிநேசன் எம்.பி. திட்டவட்டம்

*மட்டக்களப்பு, ஏப். 01*

"இலங்கைத் தமிழரசுக் கட்சி என்பது தந்தை செல்வாவினால் உருவாக்கப்பட்ட ஜனநாயகப் பண்புமிக்க ஒரு கட்சி. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் சமஷ்டிக் கொள்கையைக் கைவிடப்போவதில்லை" என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத்

07



# சொத்து சேர்த்த முறை வெளிப்படவேண்டும் இல்லையேல் அது இலஞ்ச, ஊழல் மோசடியே!

### இலஞ்ச, ஊழல் ஆணைக்குழு அதிரடி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 01

**அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் தாம் சேகரித்த சொத்துக்களை வெளிப்படுத்தவேண்டும். அதேபோல் அந்த சொத்துக்களை திரட்டிய விதத்தையும் நிரூபிக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிடின் அது இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடியை பின்னணியாக கொண்டது என்றே கருதப்படும். சிறந்த முறையில் உழைத்து, சொத்து சேகரித்தவர்கள் சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விவரங்களை சமர்ப்பிக்கும் போது நெருக்கடிக்குள்ளாகவில்லை. முறைகேடான வகையில் செயற்பட்டவர்கள் மாத்திரமே நெருக்கடிக்குள்ளானார்கள் என இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க தெரிவித்தார்.**

சொத்து மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தல் மின்னணு கட்டமைப்பை அங்குரார்ப்பணம் செய்யும் நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுப்பதிலும் பல போராட்டங்களை எதிர்கொண்டுள்ளோம். 2023 ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு கடந்த 2 ஆண்டுகளாக போராடி வருகிறோம். ஆணைக்குழுவின் சேவையாளர்கள் மற்றும் பணியாளர்களின் சம்பள பிரச்சினைக்கு தீர்வு எட்டப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு சொத்து மற்றும்

07

## இந்திய மீனவர்கள் 25 பேர் விடுதலை! 12 பேர் மறியலில்!!

*யாழ்ப்பாணம், ஏப். 01*

இந்திய மீனவர்கள் 25 பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யாத காரணத்தால் மல்லாகம் நீதிமன்றினால் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

*2026-02-19*

07

## அரிசி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி

*கொழும்பு, ஏப். 01*

உள்நாட்டு சந்தையில் தற்போது நிலவும் சம்பா மற்றும் கீரி சம்பா அரிசி தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக மாற்று அரிசி வகைகளை இறக்குமதி செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

2025, 2026 "மஹா" பருவத்தில் உற்பத்தி

07

## பொருளாதார நெருக்கடிக்கு எதிராக கூட்டு எதிர்க்கட்சியினர் போர்க்கொடி

### நாடு தழுவிய போராட்டங்களுக்குத் திட்டம்

*கொழும்பு, ஏப். 01*

நாட்டில் நிலவும் எரிசக்தி நெருக்கடி, மின்கட்டண உயர்வு மற்றும் தரமற்ற நிலக்கரி இறக்குமதி விவகாரங்கள் தொடர்பில் அரசாங்கத்திற்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூட்டு எதிர்க்கட்சி தீர்மானித்துள்ளது.

முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸின் நாராஹேன்பிட்டியில் உள்ள இல்லத்தில் நேற்று முன் தினம் மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இந்த விசேட கலந்துரையாடல் நடைபெற்றது.

இதில்

07

## அனைத்து வாகனங்களுக்கும் இன்று எரிபொருள் விநியோகம்

*கொழும்பு, ஏப். 01*

இன்று ஏப்ரல் முதலாம் திகதி ஒற்றை மற்றும் இரட்டை இலக்கங்களை கொண்ட வாகனங்களுக்கு எரிபொருள் வழங்கப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி மயூர நெத்திகுமார இதனைத் தெரிவித்தார்.

நேற்று 31ஆம் திகதியும் இன்று முதலாம் திகதியும் அடுத்தடுத்து ஒற்றை எண்களைக் கொண்ட திகதிகளாக அமைவதால், இன்றைய தினத்தில்

07

## மண்டைதீவுப் படுகொலை வழக்கு ஜூலை 28ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

*யாழ்ப்பாணம், ஏப். 01*

மண்டைதீவு படுகொலை வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில், மீண்டும் எதிர்வரும் ஜூலை மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

1990 களில், இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்ட மக்கள் தொடர்பான வழக்கு, நீதவான் அனீபா ரஜீவ் முன்னிலையில், பொலிஸாரின் சான்று சமர்ப்பணத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

காணாமல் போனோர் அலுவலகத்தின் சட்டத் தரணி பூரணி மரியநாயகம் மற்றும் அதன்

07

## ரஷ்ய பிரதி வெளியுறவு அமைச்சர் நேற்றுக் கொழும்பு வந்தடைந்தார்

*கொழும்பு, ஏப். 01*

ரஷ்ய அரசாங்கத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சர் அண்ட்ரே ருடென்கோ உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று பிற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

அவருடன் ரஷ்ய வெளிவிவகார

07



## திட்டமிட்ட குற்றங்களை தடுப்பதற்கு புதிய சட்டம்!

*கொழும்பு, ஏப். 01*

இலங்கையில் அதிகரித்து வரும் திட்டமிட்ட குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கும், அத்தகைய செயற்பாடுகளிலிருந்து பொதுமக்களைப் பாதுகாப்பதற்கும் புதிய சட்டமொன்றை இயற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள சாதாரண சட்டங்கள், திட்டமிட்ட குற்றங்களைத் தடுப்பதற்குப் போதுமானதாக இல்லை என்றும், அவற்றில் பல குறைபாடுகள் இருப்பதாகவும் அடையாளம்

07

### அகதி அந்தஸ்து மறுப்பு;

## நாடு கடத்தப்படும் யாழ்ப்பாண தமிழர்!

*யாழ்ப்பாணம், ஏப். 01*

இலங்கையில் உள்நாட்டுப் போர் மற்றும் இடப்பெயர்வுகளைச் சந்தித்து, 16 ஆண்டுகளுக்கு முன்பு சரக்கு கப்பல் மூலம் கனடா சென்றடைந்த இலங்கையரான குகதீஸ்வரன், தற்போது மீண்டும் இலங்கைக்கு நாடு கடத்தப்படும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதாக கனடிய ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட குகதீஸ்வரன் துரைசிங்கம்,இலங்கையின் உள்நாட்டுப் போர்ச் சூழலில் தாயை இழந்து, சிறுவயதிலேயே கல்வியைக் கைவிட்டு பல்வேறு

07

## எரிபொருள்களின் விலையை நிலையாக பேணத் தீர்மானம்

*கொழும்பு, ஏப். 01*

92 ரக பெற்றோல் மற்றும் டீசல் விலைகளை நிலையாகப் பேண அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் விசேட யோசனைக்கு அமைச்சரவை இந்த அனுமதியை வழங்கியுள்ளது.

இறக்குமதி விலை அதிகரிக்கும் பட்சத்தில் விநியோகஸ்தர்கள் மேலதிக வரி செலுத்தவேண்டும்.

இதன்படி, 92 ரக பெற்றோலுக்கு லீற்றருக்கு 20 ரூபாயும், ஒட்டோ டீசலுக்கு லீற்றருக்கு 100

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காணாமற்போனோர் விசாரணைகளுக்கு தடயவியல் நிபுணர்களை வழங்காத ஐ.நா.!

## காணாமற்போனோர் அலுவலக தலைவர் கவலை

கொழும்பு, ஏப். 01

காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாடுகளில் சர்வதேச அமைப்புகளின் தலையீடுகளை அந்த அலுவலகம் முற்றாக நிராகரித்துள்ளது.

காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்குத் தேவையான தடயவியல் நிபுணர்களை வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபையிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை என காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் தலைவர் மகேஸ் கட்டுலந்த கவலை வெளியிட்டுள்ளார்.

கடந்த நான்கு வருடங்களாக ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அமைப்புகள் தமது அலுவலகத்தின் தேவைகள் குறித்து மதிப்பீடுகளைச் செய்துள்ளபோதிலும், ஒரு தன்னார்வலரைக்கூட வழங்கி உதவவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எந்தவொரு நாடோ அல்லது சர்வதேச அமைப்போ தமக்குக் குறிப்பிடத்தக்க உதவிகளை வழங்காத நிலையில், அவர்கள் அறிக்கைகளை மாத்திரம் கோருவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

அரசாங்கம் தமது அலுவலகத்தின் சுயாதீனத்தன்மையில் தலையிடாது ஆதரவு வழங்கி வருவதாகவும், எனவே வெளித்தரப்புத் தலையீடுகள் அவசியமற்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், காணாமல்போனோர் விவகாரம் குறித்து விசாரணை நடத்த சர்வதேச பொறிமுறைகளை அரசாங்கம் எதிர்ப்பதாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (அ)

இலங்கைக்குச் சொந்தமான

# 42,000 மெற்றிக் தொன் எரிவாயு மாலைதீவில்!

கொழும்பு, ஏப். 01

இலங்கைக்குச் சொந்தமான 42,000 மெற்றிக் தொன் எரிவாயு கையிருப்பு தற்போது மாலைதீவில் தரித்து வைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ காஸ் லங்கா நிறுவனம் அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்திற்கான நுகர்வோர் தேவையைப் பூர்த்தி செய்ய இந்தக் கையிருப்பு போதுமானது எனவும், இதனை மிக விரைவாக நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்த நிறுவனத்தின் தலைவர் சன்ன குணவர்தன தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர, மே மாதத் தேவைக்காக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 33,000 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் ஒன்று ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி இலங்கையை வந்தடைய உள்ளது.

இதேவேளை, லாப் எரிவாயு நிறுவனமும் தனது விநியோகத்தை உறுதிப்படுத்தியுள்ளது. 7,000 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பலொன்று எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி நாட்டை வந்தடையும் என அந்த நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி நலிந்த குருகுலசூரிய குறிப்பிட்டுள்ளார்.

# உடையார்கட்டு வணிகர்கள் சாகும்வரை உண்ணாவிரதம்

முல்லைத்தீவு, ஏப். 01

முல்லைத்தீவு உடையார்கட்டில் பிரதேச செயலாளரின் நடவடிக்கைகளுக்கு ஏதிராக சில வணிகர்கள் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

உடையார்கட்டு பகுதியில் நான்கு வணிக நிலையங்களை, எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு முன்னர் அகற்றுமாறு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளரால் அறிவிக்கப்பட்டு அறிவித்தல் ஒட்டப்பட்டுள்ள நிலையில், குறித்த காணியில், நீண்ட காலமாகக் கடைகளை நடத்தி வந்தாகவும், இதனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதேச செயலாளரின் இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமக்கான குறித்த காணியை அபகரிக்காமல், மீண்டும் தங்களிடம் வழங்கக் கோரி குறித்த கடைகளுக்கு முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நான்கு வணிகர்களின் இந்தப் போராட்டத்திற்கு மக்களும் ஆதரவு வழங்கியுள்ளனர். (அ)

# சிறீலங்கன் எயார்லைன்ஸ் தலைவர் பதவி விலகலை விமர்சிக்கும் ஹர்ஷ!



கொழும்பு, ஏப். 01

சிறீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் தலைவர் சரத் கணேகோடவின் பதவி விலகலைத் தொடர்ந்து, அங்கு நிலவும் நிர்வாகச் சிக்கல்கள் மற்றும் நலன்களுக்கிடையிலான மோதல்கள் குறித்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கடும் விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

இந்தப் பதவி நியமனமானது ஆரம்பத்திலிருந்தே முறையற்றது எனக் குறிப்பிட்டுள்ள அவர், ஏவியேஷன் மற்றும் லொஜிஸ்டிக்ஸ் துறைகளில் தொடர்புடைய ஒரு தனியார் நிறுவனத்தின் உயர்மட்ட நிர்வாகிகள் தேசிய விமான சேவையின் தலைமைப் பொறுப்புகளில் இருப்பது பாரிய முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனாதிபதி ஆலோசகர் துமிந்த ஹலங்கமுவ மற்றும் தணிக்கை நிறுவனமான "இ-ஒ-வைய்"ஆகியவற்றின் தலையீடுகள் குறித்தும் கேள்வி எழுப்பியுள்ள ஹர்ஷ டி சில்வா, தேசிய விமான சேவையின் ஆளுமைத்திறன் குறித்து தனது கவலையை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, மற்றுமொரு ஜனாதிபதி ஆலோசகரான ஹான்ஸ் விஜயசூரிய தனது பதவியை ஏற்கும் முன்னரே தனியார்துறை பொறுப்புகளிலிருந்து விலகியமையைச் சுட்டிக்காட்டிய அவர், அதுவே சரியான நடைமுறை என்றும் சரத் கணேகோடவின் விவகாரத்தில் அத்தகைய வெளிப்படைத்தன்மை பேணப்படவில்லை என்றும் சாடியுள்ளார். (அ)

# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம் தீர்ப்பை மீறி செயல்படுகின்றது அரசு!

## சூழலியல் ஆர்வலர் அஜந்தா பெரேரா குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 01

ஒ.எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மீறி, அரசாங்கம் இழப்பீடு குறித்த பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதாக சூழலியல் ஆர்வலர் கலாநிதி அஜந்தா பெரேரா குற்றம் சுமத்தியுள்ளார்.

இக்கப்பல் அனர்த்தத்தினால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார பாதிப்புகளுக்காக ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை இழப்பீடாக வழங்குமாறு கடந்த ஆண்டு ஜூலை மாதம் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

கப்பலின் காப்புறுதி நிறுவனம் மற்றும் உள்ளூர் முகவர் ஆகிய இரு தரப்பினருமே இந்த இழப்பீட்டுத் தொகையை வழங்கவேண்டும் எனத் தீர்ப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், இதுவரை மிகக் குறைந்தளவிலான தொகையே திறைசேரிக்கு கிடைத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்பட்டு ஓராண்டு காலம் நிறைவடையவுள்ள சூழலில், முழுமையான தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக, சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது நீதிமன்ற உத்தரவை மீறும் செயல் என அவர் மேலும் தெரிவித்தார்.

பிரித்தானியாவில் நடைபெற்று வரும் வழக்குகள் எமது கடல் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கான இழப்பீட்டைத் தடுப்பதற்குக் காரணமாக அமைய முடியாது எனவும், "மாசுபடுத்துபவரே நட்டஈடு வழங்க வேண்டும்" என்ற சர்வதேச ரீதியிலான கொள்கையின் அடிப்படையில் இந்த இழப்பீடு இலங்கைக்குக் கிடைத்தே தீர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# தந்தை செல்வாவின் ஜனன தினம் யாழில்!



யாழ்ப்பாணம், எப்ப். 01

இலங்கை தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவின் 128 ஆவது ஜனன தினம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா நினைவு சதுக்கத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் மலர் மாலை அணிவித்ததை தொடர்ந்து, நிகழ்வில் கலந்துகொண்டவர்களால் நினைவுத் தூபிக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (அ)

# எரிபொருள்கள் மானியத்தை தொடர அரசாங்கம் தீர்மானம்

கொழும்பு, ஏப். 01

எரிபொருள்களுக்காக வழங்கப்பட்டு வரும் தற்போதைய மானியத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் டீசலுக்கு நூறு ரூபாயையும், ஒரு லீற்றர் பெற்றோலுக்கு இருபது ரூபாயையும் அரசாங்கமே தொடர்ந்தும் ஏற்கும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நடைமுறைக்கு சர்வதேச நாணய நிதியம் இதுவரை எவ்வித எதிர்ப்பையும் வெளியிடவில்லை என அமைச்சின் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால உறுதிப்படுத்தியுள்ளார்.

எரிபொருள் விலையேற்றத்தினால் நுகர்வோர் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, மாதாந்தம் சுமார் 20 பில்லியன் ரூபாய் மேலதிகச் சுமையை அரசாங்கம் பொறுப்பேற்று வருகிறது.

இந்த மானியத்தை வழங்கத் தவறினால், எரிபொருள் இறக்குமதிக்காக ஆண்டுக்கு சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் மேலதிகமாகச் செலவிட வேண்டியிருக்கும் எனவும், அது தேசிய பொருளாதாரத்தில் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தும் எனவும் அமைச்சரவைப் பேச்சாளர் கலாநிதி நலிந்த ஜயதிஸ்ஸ அண்மையில் எச்சரித்திருந்தார்.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் நிலைப்பாடுகளைக் கருத்திற்கொண்டு, எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி வரை இந்த மானியத்தைத் தொடரத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

# தாமாக முன்வந்து தமது எரிபொருள் ஒதுக்கீட்டை குறைத்த அமைச்சர்கள்!

கொழும்பு, ஏப். 01

அமைச்சரவை அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் தாமாக முன்வந்து தமது எரிபொருள் ஒதுக்கீடுகளை மூன்றில் ஒரு பங்குக்கும் மேலாக குறைத்துள்ளதாக, பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

தற்போது நிலவிவரும் எரிசக்தி நெருக்கடிக்கு மத்தியில், பொதுமக்களுக்கு ஒரு முன்னுதாரணமாக அமையும் வகையில், அனைத்து அமைச்சர்களும் இணைந்து இந்த முடிவை எட்டியதாக அவர் தெரிவித்தார்.

இந்த முடிவுக்கு இணங்க, அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட மூத்த அதிகாரிகளும் தங்களின் எரிபொருள் ஒதுக்கீட்டைக் கணிசமாகக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
01.04.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், பங்குனி 18

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## தந்தை செல்வாவின் நினைவைக் கொண்டாடுவது மாத்திரம் போதாது

இலங்கை தமிழரசு கட்சியின் தாபகத் தலைவர் தந்தை செல்வா என்று அழைக்கப்படும் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் 128 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் வடக்கிலும் கிழக்கிலும் அவரின் நினைவைக் கொண்டாடும் நிகழ்வுகள் இடம் பெற்றன. தமிழரசு கட்சி அரசியல்வாதிகள் யாழ்.நகரில் உள்ள தந்தை செல்வாவின் நினைவிடத்திலும் மற்றைய பகுதிகளில் உள்ள உருவச் சிலைகளுக்கும் மலரஞ்சலி செய்து அவரின் கொள்கைகளை உறுதியாகக் கடைப்பிடிக்கப் போவதாக உறுதி பூண்டனர்.

இன்றைய தமிழ் அரசியல் கட்சிகளில் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் மத்தியில் ஒப்பீட்டளவில் பரந்த செல்வாக்கைக் கொண்டதாக விளங்கும் தமிழரசு கட்சியைச் சேர்ந்தவர்கள் தந்தை செல்வாவை நினைவேந்தல் செய்யும்போது அவர் வளர்த்த அரசியல் இயக்கத்திற்குள் ஐக்கியம் எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

தமிழரசு கட்சியின் இன்றைய நிலைக்காக எந்தவொரு அரசியல்வாதியையும் பெயர் குறிப்பிட்டு குற்றஞ்சாட்டுவது எமது நோக்கமல்ல. அதனால் எந்த பிரயோசனமும் இல்லை. ஆனால், மீண்டும் தமிழரசு கட்சியை ஒழுங்கமைவான அரசியல் இயக்கமாக செயற்பட வைப்பதானால் தங்களின் இன்றைய அணுகுமுறைகளிலும் செயற்பாடுகளிலும் மாற்றங்களைச் செய்ய அரசியல்வாதிகள் யார்யார் என்பதை நாம் சொல்லித்தான் எவரும் தெரிந்துகொள்ள வேண்டியதில்லை.

இன்றைய தமிழரசுக் கட்சிய அரசியல்வாதிகளின் செயற்பாடுகளை நோக்கும்போது தந்தை செல்வாவினதும் அவரின் தலைமையை பின்பற்றிய அன்றைய தலைவர்கள் மற்றும் அவர்களின் வழிவந்த அடுத்த தலைமுறை தலைவர்களினதும் மேன்மை மேலும் பிரகாசமாக மனக்கண் முன் வருகிறது. முன்னையவர்களின் மேன்மையை சடங்கு ரீதியாக போற்றிக் கொண்டாடுவதால் மாத்திரம் முற்றிலும் மாறிவிட்ட இன்றைய அரசியல் நிலக்காட்சியில் பெரிதாக எதையும் சாதித்துவிடவும் முடியாது.

தமிழரசுக் கட்சியை தமிழ் மக்களின் பிரதான அரசியல் இயக்கமாக கட்டி வளர்ப்பதற்கு முன்னைய தலைவர்கள் கடைப்பிடித்த கொள்கைகளையும் அர்ப்பணிப்புச் சிந்தையுடனான செயற்பாடுகளையும் இன்றைய தலைவர்கள் ஒருகணம் திரும்பிப் பார்த்து அந்த இயக்கத்தை எந்த இலட்சணத்தில் தாங்கள் இன்று வைத்திருக்கிறார்கள் என்பதை சிந்தனைக்கு எடுக்க வேண்டும்.

2024 ஜனவரியில் திருகோணமலையில் நடைபெற்ற தலைவர் தேர்தலுக்கு பிறகு தமிழரசுக் கட்சிக்குள் நிலவும் முரண்பாடுகள் கட்சியை கட்டுறுதியான ஒரு அரசியல் இயக்கமாக வளர்ப்பதற்கு இடையூறாக இருப்பது இன்றைய தமிழர் அரசியலில் துரதிர்ஷ்டவசமான ஒரு நிலைவரமாகும். தேர்தல் போட்டியின்றி தலைவரைத் தெரிவு செய்துவந்த தமிழரசுப் பாரம்பரியத்தில் இருந்து விலகியமையே இன்றைய நிலைமக்கு காரணமாகும்.

காலஞ்சென்ற அப்பாபிள்ளை அமிர்தலிங்கமும் செல்லையா இராஜதுரையும் 1973ஆம் ஆண்டில் தமிழரசு கட்சியின் தலைவராக வருவதற்கு விரும்பியபோது போட்டியைத் தவிர்ப்பதற்காக தந்தை செல்வா இராஜதுரையை அழைத்துப்பேசி இணங்க வைத்ததை அடுத்து அமிர்தலிங்கம் ஏகமனதாக தலைவராக தெரிவாகக்கூடியதாக இருந்தது.

தலைவர் பதவிக்கான தேர்தல் என்று வந்தால் கட்சிக்குள் இயல்பாகவே பூசல்கள் வளர்ந்துவிடும் என்பதை நன்குணர்ந்து தந்தை செல்வா விவேகத்துடனும் தூரநோக்குடனும் நடந்து கொண்டதைப் போன்று 2024 ஆம் ஆண்டில் தலைவர் தேர்தலுக்கு முன்னரான நாட்களில் கட்சியின் மூத்த தலைவர்களாக இருந்தவர்கள் நடந்து கொண்டிருந்தால் இன்றைய நிலை தமிழரசுக் கட்சிக்கு ஏற்பட்டிருக்காது என்பது நிச்சயம்.

தற்போது தமிழரசு கட்சிக்குள் இறுக்கமடைந்திருக்கும் முரண்பாடுகளை களைந்து மீண்டும் கட்சியை ஒன்றணைந்த இயக்கமாக வழிநடத்திச் செல்வதற்குரிய வழிமுறைகள் பற்றி அக்கறையுடன் சிந்திக்காமல் தந்தை செல்வாவின் நினைவைக் கொண்டாடுவதில் எந்தப் பயனும் இல்லை.

# இந்தியாவில் இருந்து அகதிகள் நாடு திரும்புதலும் "டித்வா" சூறாவளி பாதிப்பிலிருந்து மீட்சியும் மேம்பட்ட கூட்டுப் பங்காண்மையும் அவசியம்



ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

இந்தியாவில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளை நாட்டுக்கு திரும்பிவருமாறு அமைச்சர் பிமல் இரத்நாயக்க விடுத்த அழைப்பும் அவர்களை இலங்கைச் சமூகத்துடன் மீள ஒருங்கிணைப்பதற்கு ஆதரவு வழங்கப்படும் என்ற அவரது உறுதிமொழியும் வரவேற்கத்தக்க நேர்மறையான ஒரு நடவடிக்கையாகும். அகதிகள் திரும்புவதை ஊக்குவிப்பது என்பது கடந்த கால நிகழ்வுகள் அலட்சியம் செய்யப்படவில்லை என்பதற்கான ஒரு முக்கியமான சமிக்ஞையாகும். சுமார் 90,000 இலங்கை அகதிகள் இந்தியாவில் தங்கியுள்ளனர், அவர்களில் பலர் 30 ஆண்டுகளுக்கும் கூடுதலான காலமாக அங்கேயே வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் திரும்பி வருகையை ஒரு சாதாரண நிர்வாகச் செயன்முறையாகக் கருத முடியாது.

நாடு திரும்ப விரும்புபவர்கள் பாதுகாப்பான, ஆதரவான மற்றும் நன்கு தயார் செய்யப்பட்ட சூழலில் வரவேற்கப்படுவதை உறுதி செய்ய வேண்டிய பிரத்தியேகமான பொறுப்பு இலங்கை அரசாங்கத்திற்கு உண்டு. அவர்கள் போதிய வீட்டு வசதி, வாழ்வாதாரம் மற்றும் சமூக ஆதரவு இன்றி நடுத்தெருவில் விடப்படவோ அல்லது ஏற்கனவே நெருக்கடியில் உள்ள சமூகங்களுக்குள் தள்ளப்படவோ கூடாது. முதன்முறையாக தாய்நாட்டிற்கு வரவிருக்கும் இளைய தலைமுறையினருக்கு, இங்கு வாழ்வதற்கான மேலதிக உறுதிகளும் தூண்டுதல்களும் தேவைப்படுகின்றன.

"டித்வா" சூறாவளியைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் மீளமைப்புப் பணிகளில் உள்ள இடைவெளிகள், இந்தியாவிலிருந்து திரும்புபவர்களை மீளக்குடியமர்த்தும் விடயத்தில் அரசாங்கம் சிறந்த திட்டமிடல், கூட்டாண்மை மற்றும் விநியோகத்தை முன்னெடுக்க வேண்டிய அவசியத்தை அடிக் கோடிட்டுக் காட்டுகின்றன. சூறாவளி தாக்கி நான்கு மாதங்களுக்குப் பின்னரும், 153,000 க்கும் அதிகமான மக்கள் இன்னும் இடம்பெயர்ந்த நிலையில் உள்ளனர். அவர்களில் பலர் தற்காலிக முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் அல்லது ஒழுங்கற்ற குடியேற்றங்களிலும் வசிக்கின்றனர்.

இதில் தற்காலிக முகாம்கள், பாடசாலைகள் மற்றும் பாதுகாப்பற்ற கட்டடங்களில் தங்கியிருக்கும் பெருந்தோட்ட மலையகத் தமிழ் குடும்பங்களும் பெருமளவில் அடங்குவர். தோட்டப் பகுதிகளில் நிவாரண மற்றும் புனரமைப்புப் பணிகள் நாட்டின் ஏனைய பகுதிகளை விடவும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன. நில ஒதுக்கீடு, வீட்டுவசதி பொறுப்பு மற்றும் நிறுவன ரீதியான ஒருங்கிணைப்பு ஆகியவற்றில் தெளிவான கொள்கை வழிகாட்டல் இல்லாததே இதற்கு முக்கிய காரணமாகும்.

தேசிய சமாதான பேரவை இதற்காக மூன்று உடனடி நடவடிக்கைகளை அவசியமானதாகக் கருதுகிறது முதலாவதாக, "டித்வா" மீட்சி மற்றும் அகதிகள் திரும்புதல் ஆகிய இரண்டையும் மேற்பார்வையிட அரசாங்கம் ஒரு உயர்மட்ட அரச அதிகார சபையை நிறுவ வேண்டும். இந்தச் சபைக்கு இடையூறுகளை நீக்கவும் ஒப்புரவான உதவி விநியோகத்தை உறுதி செய்யவும் வெளிப்படையான காலக்கெடு மற்றும் முன்னேற்ற அறிக்கைகளை வெளியிடவும் அதிகாரம் வழங்கப்பட வேண்டும். நில ஒதுக்கீடு, வீட்டுவசதி, இழப்பீடு மற்றும் உட்கட்டமைப்பு திருத்தங்கள் அனைத்து பகுதிகளிலும் சீரான முறையில் கையாளப்படுவதை இந்த பொறிமுறை உறுதி செய்ய வேண்டும்.

இதற்கு உதாரணமாக 1979 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மகாவலி அதிகார சபையைக் குறிப்பிடலாம். இது இலங்கையின் வரலாற்றிலேயே மிகப் பெரிய ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டமாகும். திட்டத்தின் அளவு மற்றும் அவசரமும் அவசியமும் காரணமாக, அந்த அதிகார சபைக்கு சாதாரண அமைச்சு எல்லைகளைத் தாண்டி செயற்படும் விரிவான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தன.

இரண்டாவதாக, இடம்பெயர்ந்த அனைத்து குடும்பங்களுக்கும் அடிப்படை வசதிகளுடன் கூடிய பாதுகாப்பான தற்காலிக தங்குமிடங்களை உறுதி செய்வதன் மூலம் நீண்ட கால அடிப்படையிலான மீள்குடியேற்றத்துடன் உடனடி நிவாரணத்திற்கும் அரசாங் கம் முன்னுரிமை அளிக்க வேண்டும். அதேவேளை, பாதுகாப்பான நில உரிமை, நியாயமான இழப்பீடு மற் றும் இயங்கக்கூடிய உள்ளூர் உட்கட்டமைப்பு வசதிகளுடன் நிரந்தர வீடுகளை விரைவாக வழங்க வேண்டும்.

பொறுப்புக்கூறலையும் அரவணைக்கப்படுதலையும் உறுதி செய்வதற்காக உள்ளூர் மொழிகளில் தொடர்பாடல் மற்றும் முறைப்பாடுகளை தெரிவிக்கும் பொறிமுறைகள் இத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

மூன்றாவதாக, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூகக் குழுக்களுடன் அரசாங்கம் முறையான கூட்டுப் பங்காண்மைகளை உருவாக்க வேண்டும். குறிப்பாக, இந்தியாவிலிருந்து திரும்புபவர்கள் விடயத்தில் சர்வோதயம் மற்றும் ஈழ அகதிகள் மறுவாழ்வு கழகம் போன்ற அனுபவம் வாய்ந்த அமைப்புகளை இணைத்துக்கொள்ள வேண்டும். தற்காலிக தங்குமிடங்கள், நிரந்தர வீடுகள், வாழ்வாதாரம் மற்றும் உளசநலச் சமூக சேவைகளை விரைவாக வழங்குவதற்கு இத்தகைய கூட்டாண்மைகள் முறையாக வலுப்படுத்தப்பட வேண்டும்.

சிவில் சமூகம் அடிமட்டங்களிலான அனுபவம், சமூக நம்பிக்கை மற்றும் செயல்பாட்டுத் திறனைக் கொண்டுள்ளது. இது அரசாங்கத்தின் முயற்சிகளை கணிசமான அளவுக்கு வலுப்படுத்தும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் ஆதரவை அணி திரட்டுமாறு நாங்கள் அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம். அவர்களின் பங்களிப்பு அரசாங்கத்தின் முயற்சிகளின் வீச்சை விரிவுபடுத்தும்.

முறையான திட்டமிடல் மற்றும் வலுவான கூட்டுப் பங்காண்மைகள் மூலம் இந்த முயற்சி நல்லிணக்கத்தை ஆதரிப்பதோடு அனைவருக்கும் நிலையான எதிர்காலத்தை உருவாக்க உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஏப்ரல் - 01 புதன்கிழமை
விசுவாவசு வருடம் - பங்குனி 18
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 12.00 - 01.30
திதி : பவுர்ணமி




**மேடம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். நட்பு வட்டம் விரியும். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். உத்தியோகத்தில் உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். கனவு நனவாகும் நாள்.

**இடபம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் பிரச்னை தீரும். சூழ்ச்சிகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். மகிழ்ச்சிதொடங்கும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**கன்னி**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**துலாம்**
எதார்த்தமாக பேசிக் கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சகஊழியர்கள் பாராட்டுவார்கள். புகழ் கௌரவம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். முயற்சிகள் பலிதமாகும்.

**தனுசு**
கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசுங்கள். புது முடிவுகள் எடுப்பீர்கள். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம். கவனம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**
சகோதர வகையில் நன்மைஉண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார். உத்தியோகத்தில் தலைமையின் ஆதரவு கிட்டும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். துணிச்சலுடன் செயல்பட வேண்டும்.

# “சர்வதேச நீதி வேண்டும்” வவுனியாவில் போராட்டம்

வவுனியா, ஏப். 01

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் வவுனியாவில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையத்தின் முன்பாக குறித்த கவனவீர்ப்பு போராட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் புகைப்படங்களை தாங்கியவாறும், நீதி கோரிய பதாகைகளை ஏந்தியவாறும் “வேண்டும் வேண்டும் சர்வதேச நீதி வேண்டும், வடக்கும், கிழக்கும் தமிழர் தாயகம்” போன்ற கோசங்களை எழுப்பினர். (எ)



# பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 571 பேர் கைது

கொழும்பு, ஏப். 01

நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 571 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன் 29, 036 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 22 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 243 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 171 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 147 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 80 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 4,471 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# இணுவிலில் முதியவரின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப். 01

இணுவில் கந்தசுவாமி கோவில் அருகே முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டார்.

சுதுமலை பகுதியைச் சேர்ந்த குறித்த நபர், சந்நிதி முருகன் ஆலயத்துக்கு செல்வதாக வீட்டில் கூறிவிட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், நேற்றுக் காலை இணுவில் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார்.

இது குறித்து சுன்னாகம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. சடலத்தை மீட்டு உடற்கூற்று பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-05)

# மணற்காடு சவுக்கம் காட்டில் தீ பரவல்

## விரைந்து சென்று கட்டுப்படுத்திய பிரதேச சபை



யாழ்ப்பாணம், ஏப். 01

வடமராட்சி கிழக்கு மணற்காடு சவுக்கம் காட்டில் தீப்பரவல் ஏற்பட்ட நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸின் அறிவுறுத்தலின் பேரில் உப தவிசாளர் காந்தரூபன், செயலாளர் மற்றும் ஊழியர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று தண்ணீர் பாய்ச்சி தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீயணைப்பு பணியில் பிரதேச மக்களும் இணைந்திருந்தனர்.

தீ பற்றிய பகுதியை வனவள திணைக்கள அதிகாரிகளும் ஆய்வு செய்தனர்.

குறித்த சவுக்கு மர காட்டுக்கு விஷமிகள் அடிக்கடி தீ வைத்து வருகின்றனர். இதேவேளை, நாளாந்தம் 50 இற்கும் மேற்பட்ட விறகு வியாபாரிகள் சவுக்கம் விறகுகளை வெட்டி கொண்டு செல்கின்றனர். (எ-05)

# படகு சேவை கட்டணம் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 01

குறிகட்டுவான் - நயினாதீவு இடையிலான படகு சேவைக்கான கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது.

எரிபொருள் விலையேற்றம் காரணமாக இந்த கட்டண உயர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்படி, தற்போது நடைமுறையில் உள்ள கட்டணத்தில் இருந்து 20 ரூபாய் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, இன்று புதன்கிழமை முதல் ஒருவருக்கான படகு கட்டணம் 100 ரூபாயாக அறவிடப்படும் என நயினாதீவு தனியார் படகு உரிமையாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (எ)

# குடும்பஸ்தரின் சடலம் கரையொதுங்கியது

யாழ்ப்பாணம், ஏப். 01

பருத்தித்துறை வியாபாரி மூலையில் நேற்றுக்காலை குடும்பஸ்தரின் சடலம் கரையொதுங்கியது.

குறித்த நபரை நேற்று முன்தினம் இரவிலிருந்து காணவில்லை என்று உறவுகள் தேடிக்கொண்டிருந்த நிலையில் நேற்றுக்காலை அவரது சடலம் கரையொதுங்கியது.

சடலம் கரையொதுங்கிய நிலையில் கிராம வாசிகளால் பருத்தித்துறை பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் நேற்று முன்தினத்திலிருந்து காணாமல் போன அல்வாய் வடக்கு கோவில் தோட்டத்தை சேர்ந்த சின்னத்தம்பி குலசிங்கம்(வயது- 55) என அடையாளம் காணப்பட்டார். (எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நெருக்கடி நிலையையே நினைவுபடுத்துகின்றது

## மரிக்கார் எம். பி. குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 01

நாட்டில் தற்போது நிலவும் சூழலானது கடந்த 16 மாதங்களுக்கு முந்தைய நெருக்கடி நிலையையே நினைவுபடுத்துகின்றது. குறைந்த விலைக்கு எரிபொருள் தருவதாகக் கூறிவிட்டு தற்போது அதிக வரி விதித்து அரசாங்கம் மக்களைச் சுரண்டுகிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் நிலையில், அரசாங்கத்தின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர்



மேலும் கூறுகையில்,

"நாட்டில் தற்போது இடம்பெறும் நிகழ்வுகள் கடந்த 16 மாதங்களுக்கு முன்னர் காணப்பட்ட நிலைமையை நினைவுபடுத்துகின்றன. அந்தக் காலப்பகுதியில் தேர்தல் பிரசாரங்களின் போது கப்பலிலிருந்து தரையிறக்கும் பெருமதிக்கே நுகர்வோருக்கு எரிபொருளை வழங்குவோம் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வாக்குறுதியளித்தார். ஆனால், இன்று 128 ரூபாய் வரி விதித்து 400 ரூபாய்க்கு எரிபொருள் விற்பனை செய்யப்படுகின்றது.

அதேபோன்று அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் குறைக்கப்படும் என்றும் கூறப்பட்டது. ஆனால், இதுவரையில் அதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக அவற்றின் விலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் போக்கினையே காண்பிக்கின்றன. 2022 நெருக்கடி காலப்பகுதியிலும் உலக சந்தை விலை அதிகரிப்புக்கேற்ப உள்நாட்டிலும் விலை அதிகரிகரிக்கப்படுமாயின் அரசாங்கம் என்ற ஒன்று எதற்கு என்று கேள்வியெழுப்பினர். இப்போது அதனை தாங்கள் செய்கின்றனர்"- என்றார். (எ)

# மாயமான மாணிக்கக்கல் வர்த்தகர் சுரங்கக் குழிக்குள் சடலமாக மீட்பு!

இரத்திரபுரி, ஏப். 01

கஹவத்தை, நீலகம பகுதியில் மர்மமான முறையில் காணாமல் போயிருந்த மாணிக்கக்கல் வர்த்தகரின் சடலம் நேற்று முன்தினம் சுரங்கக் குழி ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது.

கஹவத்தை - நீலகம வீதியில் மாணிக்கக்கல் வர்த்தகர் ஒருவர் மாயமானமை தொடர்பில் கஹவத்தை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

கஹவத்தை, கட்டங்கே பகுதியைச் சேர்ந்த 61 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு காணாமல் போயிருந்தார்.

கடந்த 28ஆம் திகதி பகல் வேளையில், குறித்த வர்த்தகர் கஹவத்தை - நீலகம வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்தமை ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்தது.

பின்னர், அவரது மோட்டார் சைக்கிள் அவ்வீதியின் வளைவு ஒன்றுக்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் கண்டறியப்பட்டதுடன், நேற்று முன்தினம் அவரது தொலைபேசியும் அதே வீதிக்கு அருகிலுள்ள தேயிலை தோட்டம் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டிருந்தது. (எ)

தரம் குறைந்த நிலக்கரி விவகாரம்:

# அமைச்சர்மீது ஜனாதிபதி அநுர நடவடிக்கை எடுக்க வேண்டும்

களுத்துறை, ஏப். 01

தரம் குறைந்த மருந்துப்பொருட்களை கொண்டுவந்த கெஹலிய ரம்புக்வெலவை பதவி விலகி செல்லுமாறு தெரிவித்த அநுரகுமார திஸநாயக்க, தனது அமைச்சரவையில் இருந்துகொண்டு தரம் குறைந்த நிலக்கரி கொண்டுவந்து நாட்டுக்கு கோடிக்கணக்கில் நஷ்டத்தை ஏற்படுத்திய வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியை பதவி நீக்க பின்வாங்கி வருகிறார். கெஹலிய செய்த தவறையே தற்போது குமார ஜயக்கொடி செய்துள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

களுத்துறையில் திங்கட்கிழமை நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞன் உட்பட இருவர் கைது

கொழும்பு, ஏப். 01

நாட்டின் இருவேறு பகுதிகளில் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.

இதன்படி கம்பஹா - திவுலப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தூனகஹ பகுதியில் திங்கட்கிழமை இரவு பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது, 100 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 24 வயது இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, கொழும்பு - கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஜீமாவத்தை பகுதியில், திங்கட்கிழமை இரவு கொழும்பு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, ஐஸ் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 18 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

# நாடு முழுவதும் வறட்சியான வானிலை நிலவக்கூடும்

கொழும்பு, ஏப். 01

நாடு முழுவதிலும் வறட்சியான வானிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கண்டி, நுவரெலியா, மாத்தளை மற்றும் பதுளை மாவட்டங்கள் தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களில் அதிகரித்த வெப்பநிலை காணப்படும்.

சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களின் சில இடங்களிலும் அத்துடன் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய வாய்ப்புக் காணப்படுகின்றது.

பலத்த காற்றும் மின்னல் தாக்கங்களும் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்களில் சீரான வானிலை காணப்படும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் கிழக்கு திசையில் இருந்து அல்லது மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

நாட்டை சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் மிதமான அலையுடன் காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# பஸ் மோதி பாதசாரி பலி!

கேகாலை, ஏப். 01

கேகாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொலகொட பகுதியில், கொழும்பிலிருந்து கண்டி நோக்கி பயணித்த தனியார் பஸ் பாதசாரி மீது மோதியதில் அவர் உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி, கேகாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் மொலகொட பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மின்சாரக் கட்டண அதிகரிப்புடன் ரைஸ், கொத்து விலைகள் உயர்வு

## உணவக உரிமையாளர்கள் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 01

நள்ளிரவு முதல் ரைஸ் மற்றும் கொத்து ஆகியவற்றின் விலைகளை 30 ரூபாயால் அதிகரித்துள்ளதாக உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சிற்றுண்டிகளின் விலையும் 10 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் ஹர்ஷண ருக்ஷான் தெரிவித்தார்.

இதேவேளை, தேநீர் மற்றும் பால் தேநீர் ஆகியவற்றின் விலைகளும் 5 ரூபாயால் அதிகரிக்கப்பட்டன.

ஏப்ரல் முதலாம் திகதி முதல் மின்சாரக் கட்டணம் அதிகரிப்பதன் காரணமாகவே, இவ்வாறு உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க வேண்டியுள்ளது என்று உணவக உரிமையாளர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

உணவகங்கள் நடத்தப்படும் அனைத்து இடங்களிலும் மின்சாரப் பயன்பாடு 180 அலகுகளைத் தாண்டும் எனவும், அத்தகைய சூழ்நிலையில் பாரிய மின்சாரக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியிருப்பதனால், இந்தத் தொழிற்துறையைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்காகவே இந்த விலை அதிகரிப்பு தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஹர்ஷண ருக்ஷான் மேலும் தெரிவித்தார். (எ)

# போதைப்பொருட்களுடன் மேலும் 914 பேர் சிக்கினர்

கொழும்பு, ஏப். 01

ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய, நாட்டில் போதைப் பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், திங்கட்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் 914 பேர் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 20 பேரும், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய 22 பேரும் கைது செய்யப்பட்டனர். இதேவேளை, 922 சோதனைகள் நடத்தப்பட்டதுடன், இருவர் புனர்வாழ்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்க பரிந்துரைக்கப்பட்டனர்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் போது சிக்கிய சந்தேக நபர்கள் வைத்திருந்த போதைப்பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றினர்.

இதற்கமைய, சந்தேக நபர்களிடமிருந்து 334 கிராம் ஹெரோயின், 01 கிலோ 446 கிராம் ஐஸ், 01 கிலோ 860 கிராம் கஞ்சா, 90 கஞ்சா செடிகள், 220 மில்லி கிராம் குஷ் ரக போதைப்பொருள் 109 கிராம் ஹஷீஷ் ரக போதைப்பொருள், 640 போதை மாத்திரைகள், 319 கிலோ 260 கிராம் மதனமோதகம் மற்றும் 193 கிராம் மாவா போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# பஸ்ஸில் ஏறுவதற்கு முயன்ற பெண் கால் வழுக்கி விழுந்து படுகாயம்!

ஹற்றன், ஏப். 01

நுவரெலியா - ஹற்றன் ஏ7 பிரதான வீதியில், நானுஓயா டெஸ்போட் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் காயமடைந்த நிலையில் நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தலவாக்கலையிலிருந்து நுவரெலியா நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸில் ஏறுவதற்கு முற்பட்ட போதே குறித்த பெண் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

குறித்த பஸ், டெஸ்போட் பகுதியில் உள்ள வளைவு ஒன்றில் மெதுவாகச் சென்று கொண்டிருந்த போது, அதனை நிறுத்தப்போவதாக நினைத்த பெண், பஸ்ஸின் மிதிபலகையில் ஏறுவதற்கு முயற்சித்துள்ளார். இதன்போது எதிர்பாராத விதமாக கால் வழுக்கி வீதியில் விழுந்த நிலையில், பஸ்ஸின் முன்பக்க சக்கரம் ஏறியதில் அவரது இரண்டு கால்களும் நசுங்கி பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதி நானுஓயா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வழமையாக ஹற்றன் மற்றும் நுவரெலியா இடையில் பயணிக்கும் பஸ் நேற்று சேவையில் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக குறித்த பஸ்ஸில் அதிகளவான பயணிகள் பயணித்துள்ளனர்.

குறித்த வீதியில் முறையான போக்குவரத்துச் சேவை இல்லாமையே இவ்வாறான விபத்துக்களுக்கு பிரதான காரணம் என அப் பகுதி பொதுமக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (எ)

# கட்டாக்காலி மாடுகள் பிடிப்பு

சம்மாந்துறை, ஏப். 01

சம்மாந்துறையில் போக்குவரத்துக்கு இடையூறாக காணப்பட்ட கட்டாக்காலி மாடுகளை சம்மாந்துறை பிரதேச சபையினர் பொலிஸாருடன் இணைந்து திங்கட்கிழமை இரவு பிடித்தனர்.

அம்பாறை- சம்மாந்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பொதுப் போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் விடப்பட்ட கட்டாக்காலி மாடுகளால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதுடன், பெறுமதியான பயிர் வகைகளும் சேதப்படுத்தப்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் கிடைத்ததை தொடர்ந்து கட்டாக்காலி மாடுகளை பிடிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைவாக, பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் சம்மாந்துறை நகர் பிரதேசத்தில் போக்குவரத்துக்கு இடையூறாக திரிந்த கட்டாக்காலி மாடுகள் பிடிக்கப்பட்டன. (எ-01)

# சொத்து, பொறுப்பு விவரங்கள் இனி மின்னணு கட்டமைப்பில்

கொழும்பு, ஏப். 01

சொத்து மற்றும் பொறுப்பு விவரங்களை சமர்ப்பிப்பதற்காக நேற்று முதல் மத்திய மின்னணு கட்டமைப்பு திறக்கப்பட்டுள்ளது என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்றைய தினத்திலிருந்து சொத்து மற்றும் பொறுப்பு விவரங்களை இந்த மத்திய மின்னணு கட்டமைப்பின் ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும் என்று அதன் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸநாயக்க குறிப்பிட்டார்.

இது குறித்து மேலதிக விவரங்களை வழங்கிய இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸநாயக்க கூறுகையில்,

"2023ஆம் ஆண்டின் 9ஆம் இலக்க ஊழல் எதிர்ப்பு சட்டத்தின் பிரகாரம், இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் நிர்வகிக்கப்படும் மத்திய மின்னணு கட்டமைப்பை விவரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்காகத் திறக்கும் நிகழ்வு, நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைந்துள்ள பண்டாரநாயக்க சர்வதேச ஆய்வு மையத்தில் நடைபெற்றது. இந்த மத்திய மின்னணு கட்டமைப்பு செயல்படத் தொடங்கிய பின்னர், சொத்து மற்றும் பொறுப்பு விவரங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள், தமது விவரங்களை இந்தக் கட்டமைப்பின் ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும்." என்றார். (எ)

# ஓட்டோ- லொறிகளுடன் மோதி விபத்து 3 பிக்குணிகள் உட்பட நால்வர் காயம்

அம்பாந்தோட்டை, ஏப். 01

சூரியவெவ, நுகேகந்த பகுதியில் ஓட்டோ ஒன்று இரண்டு லொறிகளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த மூன்று பிக்குணிகள் படுகாயமடைந்த நிலையில் அம்பாந்தோட்டை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்றுக்காலை கிளை வீதியிலிருந்து வந்த ஓட்டோ திடீரென பிரதான வீதிக்குள் நுழைய முற்பட்டபோது, பிரதான வீதியில் வந்த லொறியுடன் மோதியதுடன், வீதியில் நிறுத்தப்பட்டிருந்த மற்றொரு சிறிய லொறியுடனும் மோதி இந்த விபத்து சம்பவித்தது.

ஓட்டோ சாரதியின் கவனக்குறைவான வாகனம் செலுத்துதலே இந்த விபத்துக்கு காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், இந்த விபத்தில் ஓட்டோ சாரதியும் படுகாயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

# சட்டமா அதிபரின் தலையீட்டுக்கு கல்முனை நீதிமன்றில் எதிர்ப்பு!

கல்முனை, ஏப். 01

குற்றவியல் மிரட்டல் மற்றும் நொத்தாரிஸ் ஒருவரின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள அம்பாறை மேல் நீதிமன்ற நீதிபதி அந்தனி ஜெயலக்ஷி டி சில்வாவை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கிய ஆலோசனைக்கு, பாதிக்கப்பட்ட தரப்பு சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தனது கடுமையான ஆட்சேபனையை முன்வைத்தார்.

இந்த வழக்கு கல்முனை நீதிவான் நீதிமன்றில் நீதிவான் எம். சாஜித் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள் ளப்பட்டபோது, வழக்குத் தொடுநர் தரப்பில் மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் ஜனக் பண்டார ஆஜராவதற்கு சுமந்திரன் அடிப்படை ஆட்சேபனை தெரிவித்தார்.

சந்தேக நபரான நீதிபதி சுமார் 20 வருடங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றியவர் என்பதால், அதே திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் இந்த வழக்கில் தலையிடுவது ஒரு தெளிவான "அக்கறை முரண்" என அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் இருந்து, பல நீதியரசர்கள் சந்தேக நபருடன் பணிபுரிந்த காரணத்தால் விலகியுள்ளதையும், தற்போது நான்காவது தடவையாக புதிய நீதியரசர் குழாம் அமைக்கப்படவுள்ளதையும் சுமந்திரன் மன்றின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

சந்தேக நபரின் பெற்றோருக்கு எதிரான மட்டக்களப்பு நீதிமன்ற வழக்கில் சட்டமா அதிபர் காரியாலயம் தலையிட்டு அவர்களை விடுவித்தமையை குறிப்பிட்ட சுமந்திரன், நூற்றுக்கணக்கான வழக்குகள் தேங்கிக் கிடக்கும் நிலையில் இந்த நீதிபதிக்காக மட்டும் மிக விரைவாக விடுவிப்பு ஆலோசனை வழங்கப்பட்டது ஏன் என கேள்வி எழுப்பினார். (எ)

# 10 மில்லியன் ரூபாய்க்கும் அதிக நஷ்டம்: ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் கைது

கொழும்பு, ஏப். 01

அரசாங்கத்துக்கு 10 மில்லியன் ரூபாய்க்கும் அதிக நிதி இழப்பை ஏற்படுத்தியமை மற்றும் ஊழல் குற்றச்சாட்டின் கீழ் ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட கிராம உத்தியோகத்தர், அதிக வருமானம் ஈட்டும் நபர் ஒருவருக்கு விவசாயி என்ற தகுதியின் கீழ் போலியான வருமான சான்றிதழை வழங்கியுள்ளார். இதன் மூலம் அரசாங்கத்துக்கு சேர வேண்டிய 10 மில்லியன் ரூபாய்க்கும் அதிக நிதி இழப்பை ஏற்படுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வெளித்தரப்பு நபர் ஒருவருக்கு நிதி ஆதாயங்களையும், வரப்பிரசாதங்களையும் பெற்றுக் கொடுக்கும் வகையில் இந்த ஊழல் நடவடிக்கையை அவர் முன்னெடுத்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் திங்கட்கிழமை மதியம் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து அவர் கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார். நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு முன்னெடுத்து வருகின்றது. (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## சமஷ்டிக் கொள்கை...

தலைவர் தந்தை செல்வாவின் 128 ஆவது ஜனன தின நிகழ்வு, மட்டக்களப்பு நகரில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. தமிழரசுக் கட்சியின் மண்முனை வடக்குக் கிளையின் தலைவரும் மட்டக்களப்பு மாநகர சபையின் மேயருமான சிவம் பாக்கியநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறிநேசன் அங்கு ஆற்றிய உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

தமிழரசுக் கட்சி என்பது அடக்குமுறைகளைக் கொண்ட கட்சியல்ல. தந்தை செல்வாவின் காலத்தில் எவ்வித அடக்குமுறைகளும் பிரயோகிக்கப்படவில்லை. அனைவரையும் அரவணைத்துச் செல்லும் கொள்கை ரீதியான கட்சியாகவே இது திகழ்ந்தது. தனிமனிதச் சிந்தனைகளை விட, தமிழ் மக்களின் அபிலாஷைகளை உள்ளடக்கிய பொதுச் சிந்தனையே எமது கொள்கையாகும்.

சமஷ்டிக் கொள்கையை நாங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கைவிடவில்லை. இனிமேலும் கைவிடமாட்டோம். எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் இதுவே அடிப்படைப் பண்பாகக் காணப்பட வேண்டும். இதனைத் தனிப்பட்ட ரீதியில் எவரும் மாற்றவோ அல்லது வேண்டாம் என்று சொல்லவோ முடியாது.

பேரினவாத சக்திகள் ஒற்றையாட்சிச் சிந்தனையிலும், மறுபுறம் அதிதீவிரச் சிந்தனை கொண்டவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையிலும் இருந்தனர். இவ்விரண்டுக்கும் இடையில் எட்டப்படக்கூடிய ஒரே நடுநிலைத் தீர்வு 'கூட்டாட்சி' முறையாகும். இது தந்தை செல்வாவினால் வகுக்கப்பட்ட தீர்மானமாகும். ஒற்றையாட்சிக்குள் எங்களைக் கொண்டுவர நினைக்கும் பேரினவாத சக்திகளின் திட்டங்களுக்கு நாங்கள் ஒருபோதும் தலையாட்ட முடியாது.

ஒற்றுமை என்பது பேசுவதற்கு இனிமையாக இருக்கலாம். ஆனால், வெளியில் ஒற்றுமையைப் பேசிக்கொண்டு உள்ளுக்குள் பகையை வளர்த்தால் அது ஒருபோதும் சாத்தியப்படாது. தமிழ்த் தேசியக் கட்சிகள் உண்மையான நோக்கத்தில் ஒன்றிணைய வேண்டும்." - என்றார். (அ)

## சொத்து சேர்த்த...

பொறுப்புக்களை வெளிப்படுத்தும் போது பல பிரச்சினைகள் மற்றும் நெருக்கடிகளை அனைவரும் எதிர்கொண்டனர்.சட்டத்தை தெரியாமல் இருப்பது விடுவிப்புக்கான காரணமல்ல என்பதை குறிப்பிட்டுக் கொள்கிறோம். சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் கடந்த ஆண்டு சுமார் 3 இலட்சம் கோப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களை பகிரங்கப்படுத்த வேண்டும் என்று சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் பிரகாரம் செயற்படும் போதும் ஒரு தரப்பினர் அதையும் எதிர்க்கிறார்கள்.

சட்டத்தின் பிரகாரம் சர்வதேச மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எண்ணக்கருக்கருக்களை ஒருசிலர் எதிர்க்கிறார்கள்.இவ்வாறான நிலையில் நாடு என்ற அடிப்படையில் எவ்வாறு முன்னேற்றமடைவது.

அரச அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகள் தாம் சேகரித்த சொத்துக்களை வெளிப்படுத்த வேண்டும். அதேபோல் அந்த சொத்துக்களை திரட்டிய விதத்தையும் நிரூபிக்க வேண்டும்.அவ்வாறு இல்லாவிடின் அது இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடியை பின்னணியாக கொண்டது என்றே கருதப்படும்.

சிறந்த முறையில் உழைத்து, சொத்து சேகரித்தவர்கள் சொத்து மற்றும் பொறுப்பு தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்கும் போது நெருக்கடிக்குள்ளாகவில்லை. முறைகேடான வகையில் செயற்பட்டவர்கள் மாத்திரமே நெருக்கடிக்குள்ளானார்கள்.

இந்த ஆண்டு சொத்து மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்களை மின்னணு முறையில் மாத்திரமே சமர்ப்பிக்க வேண்டும். கடதாசி ஊடாக சமர்ப்பிப்பதை இனி ஏற்க முடியாது-என்றார். (அ)

## பொருளாதார...

பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின் போது, இறக்குமதி செய்யப்பட்ட தரம் குறைந்த நிலக்கரி காரணமாக மின் உற்பத்திக்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் ஏற்பட்டுள்ள பாரிய சேதங்கள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தல்.

எவ்வித நியாயமான காரணமுமின்றி எரிபொருள் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்தல்.

ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்டிருந்த எரிபொருள் கையிருப்புகளுக்கு விலையை உயர்த்தியமைக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

கூட்டு எதிர்க்கட்சியினால் "திசைக்காட்டியின் தரமற்ற நிலக்கரி" எனும் தலைப்பில் நாடு தழுவிய ரீதியில் கருத்தரங்குகளை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அவிசாவளையில் நடைபெற்ற முதலாவது கருத்தரங்கு வெற்றியளித்ததைத் தொடர்ந்து, அடுத்த கருத்தரங்கை மே மாதம் தொடக்கத்தில் மாத்தறையில் நடத்த முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க விருப்பம் தெரிவித்துள்ளார்.

மாத்தறையைத் தொடர்ந்து கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களிலும் இக்கருத்தரங்குகள் நடைபெறும்.

மின்கட்டண உயர்வு மற்றும் தற்போதைய பொருளாதாரச் சுமை குறித்து விளக்கமளிக்கக் கூட்டு எதிர்க் கட்சியினர் இன்று (ஏப்ரல் 01) விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்தவும் தீர்மானித்துள்ளனர்.

பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்/டன் நடைபெற்ற இச்சந்திப்பில் நிமல் சிறிபால டி சில்வா, பாட்டலி சம்பிக்க ரணவக்க, தலதா அத்துகோரள, சாகல ரத்னாயக்க, மனோ கணேசன், ரோஹித அபேகுணவர்தன, பிரேமநாத் சி தொலவத்த, சுகீஸ்வர பண்டார, மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன, நிமல் லான்சா உள்ளிட்ட பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (அ)

## அரிசி இறக்குமதிக்கு...

செய்யப்பட்ட மொத்த சம்பா மற்றும் கீரி சம்பா அரிசியின் அளவு, நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லை.

இதன் காரணமாக, எதிர்வரும் 2026 மே மாதம் முதல் இந்த அரிசி வகைகளுக்குக் கடுமையான தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாக விவசாயத் திணைக்களம், ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் தேசிய அறுவடைக்கு பிந்திய தொழில்நுட்ப நிறுவனம் ஆகியன சுட்டிக்காட்டியுள்ளன.

இதனை கருத்திற் கொண்டே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (அ)

## இந்திய மீனவர்கள்...

அன்று இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய சமயம் 25 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களின் வழக்கு தொடர்ச்சியாக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் இடம்பெற்ற நிலையில் நேற்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது 25 மீனவர்களும் மல்லாகம் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டனர்.

இதேவேளை, 2026-02-18 அன்று கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்கள் தொடர்பான வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அனைத்து வாகன...

இரட்டை இலக்கங்களைக் கொண்ட வாகனங்களுக்கும் எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, எவ்வித கட்டுப்பாடுகளுமின்றி அனைத்து வகையான வாகனங்களும் இன்று எரிபொருளைப் பெற்றுக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நெருக்கடி நிலைமையை கருத்திற்கொண்டு, வாகன இலக்கத் தகட்டின் இறுதி இலக்கத்தின் அடிப்படையில், வாராந்த ஒதுக்கீட்டின் அடிப்படையில் எரிபொருள் அனுமதிப்பத்திரத்துக்கமைய எரிபொருள் வழங்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

## மண்டைதீவுப் படுகொலை...

பிராந்திய இணைப்பாளர் த.செல்வக்குமார், வேலணை பிரதேச சபை உறுப்பினரும் தீவக முன்னேற்றக் கழகத் தலைவருமான சுவாமிநாதன் பிரகலாதன் ஆகியோர் நேற்று மன்றில் முன்னிலையாகி இருந்தனர்.

இதன் போது வழக்கின் சான்றுகளை பொலிஸார் நீதிபதிக்கு சமர்ப்பித்தனர்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி, குறித்த படுகொலை சம்பவத்தில் தனது மகனை பறிகொடுத்த 81 வயதான ஸ்ரிபன் மரில்டா மற்றும் வேலணை பிரதேச சபை உறுப்பினர் பிரகலாதன் ஆகியோர் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

அதன் பின்னர், குறித்த வழக்கு, கடந்த 17 செப்ரெம்பர் 2025 அன்று, ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது, ஊர்காவற்றுறை பொலிஸாரால், குறித்த புதைகுழியின் அகழ்வுப் பணியை முன்னெடுப்பதற்கான வசதிகள் இல்லை என சுட்டிக் காட்டப்பட்து.

அதனையடுத்து, வழக்கு யாழ்ப்பாண மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பான அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறும், யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவுக்கு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதுடன், எதிர்வரும் ஜூலை மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (அ)

## திட்டமிட்ட குற்றங்களை...

காணப்பட்டதையடுத்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்ட குற்றங்களைத் தடுப்பதற்கான புதிய சட்டமூலத்தின் ஆரம்பக் வரைவைத் தயாரிப்பதற்காக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சரினால் விசேட நிபுணர் குழுவொன்று நியமிக்கப்பட்டது.

குறித்த நிபுணர் குழு தயாரித்த ஆரம்ப வரைவின் அடிப்படையில், புதிய சட்டமூலத்தை வரைவு செய்வதற்கு சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கான கூட்டு முன்மொழிவுக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆகியோரால் இதற்கான கூட்டு யோசனை முன்வைக்கப்பட்டது. (அ)

## நாடு கடத்தப்படும்...

தொழில்களில் ஈடுபட்டு வந்துள்ளார்.

2009 ஆம் திகதி போர் முடிவுக்கு வந்த நிலையில், சந்தேகத்தின் பேரில் அச்சுறுத்தல்களை எதிர்கொண்ட அவர், 2010 ஆம் ஆண்டில் 492 தமிழ் ஏதிலிகளுடன் "எம்.வி. சன் சீ" சரக்குக் கப்பலில் ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொண்டு கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தை வந்தடைந்தார்.

எனினும், கனடாவில் அவருக்கு முறையான சட்ட உதவி கிடைக்காதமை மற்றும் மொழிபெயர்ப்புச் சிக்கல்களால் அவரது ஏதிலி அந்தஸ்து கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இதனால் ஏற்பட்ட மன உளைச்சலில் அவர் கடும் மனநலப் பாதிப்புக்கும், வீடற்ற நிலைக்கும் தள்ளப்பட்டார்.

அப்போதைய கனடிய அரசு மற்றும் ஊடகங்கள் அந்தக் கப்பலில் வந்தவர்களைத் தவறாகச் சித்தரித்தமையால், அவர் இலங்கைக்குத் திரும்பினால் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைச் சந்திக்க நேரிடும் என அவரது தற்போதைய சட்டத்தரணி வாதிடுகிறார்.

கடந்த காலங்களில் இவருக்கு வழங்கப்பட்ட சட்டப் பிரதிநிதித்துவம் பலவீனமாக இருந்ததே இந்த நிலைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

தற்போது மவுண்ட் சினாய் மருத்துவமனையின் சிகிச்சையில் தேறி வரும் குகதீஸ்வரன், சமூகத்தில் மனநலப் பாதிப்பு உள்ளவர்களுக்குத் தன்னார்வலராக உதவி வருகிறார்.

இந்நிலையில், எதிர்வரும் ஏப்ரல் 16ஆம் திகதி அவரை நாடு கடத்தத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அதற்குத் தடை கோரி நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது.

இவருக்கு முறையான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என மனித உரிமை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன. (அ)

## எரிபொருள்களின்...

ரூபாயும் விநியோகஸ்தர்கள் செலுத்த வேண்டும்.

பொதுப் போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் பரவலாகப் பயன்படுத்தும் எரிபொருள்களின் விலைகளை நிலையாகப் பேணுவதன் மூலம், உலக சந்தை அழுத்தங்களுக்கு மத்தியிலும் எரிபொருள் விலைகளை மலிவாக வைத்திருப்பதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும் என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (அ)

## ரஷ்ய பிரதி...

அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரும் தூதுக்குழுவினராக வருகை தந்துள்ளனர். இவர்கள் நேற்று மாலை 04.20 மணியளவில் இந்தியாவின் புதுடில்லியிலிருந்து ஏ.ஐ.-281 எயார் இந்தியா விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அவர்களை வரவேற்பதற்காகத் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர் பொறியியலாளர் ஜனித ருவன் கொடித்துவக்கு மற்றும் இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் ஜகாரியன் உள்ளிட்ட குழுவினர் கட்டுநாயக்க விமான நிலையத்தின் விசேட விருந்தினர் அறையில் காத்திருந்தனர்.

இலங்கைக்கு வருகை தந்துள்ள இவர்கள் இங்கு 05 நாட்கள் தங்கியிருக்கவுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# எரிசக்தி அவசரகால நிலையை அமுல்படுத்தும் தேவை இல்லை!

## எரிசக்தி அமைச்சு அதிகாரிகள் தகவல்

கொழும்பு, ஏப். 01

ஈரான் - அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் இடையிலான போர் பதற்றத்தால் ஹோர்முஸ் நீரிணை பகுதியளவில் மூடப்பட்டுள்ள போதிலும், இலங்கையில் தற்போதைக்கு 'தேசிய எரிசக்தி அவசரகால நிலையை' பிரகடனப்படுத்தும் உடனடி தேவை இல்லை என்று எரிசக்தி அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய கிழக்கில் நிலவும் போர் சூழலால் உலகளாவிய எரிசக்தி விநியோகத்தில் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது.

இது குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த எரிசக்தி அமைச்சின் அதிகாரிகள், தற்போதைய நிலையில் அவசரகால நிலையை அறிவிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தின் ஊடகப் பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில், "எதிர்கால பாதிப்புகளைக் கணிப்பதை விட, தற்போதைய நிலையில் எரிசக்தி சேமிப்பிற்கே அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகின்றது" என்று தெரிவித்ததாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கு பதற்றத்தைத் தொடர்ந்து 2 வாரங்களுக்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மத்திய கிழக்கு நெருக்கடியை சமாளிக்க "இலங்கையைப் பாதுகாப்போம்" எனும் திட்டத்தின் கீழ் பல நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி புதன்கிழமைகளில் அரசாங்க விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசாங்க நிறுவனங்கள் தங்களின் எரிபொருள் பயன்பாட்டை 25 வீதம் வரை குறைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மேலும் மின்சாரப் பயன்பாடு அதிகமாக இருக்கும் நேரங்களில் பொதுமக்கள் சிக்கனமாக மின்சாரத்தைப் பயன்படுத்துமாறு கோரப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஜயவர்தனபுர மற்றும் பேராதனை உள்ளிட்ட அரச பல்கலைக்கழகங்களின் கல்வியாளர்கள் ஒரு முக்கிய எச்சரிக்கையை விடுத்துள்ளனர்.

ஹோர்முஸ் நீரிணைப் பகுதி நீண்ட காலத்திற்கு மூடப்பட்டிருந்தால், இலங்கையில் உணவுப் பொருள்களின் விலை உயர்வு, உர விநியோகத் தடை மற்றும் போக்குவரத்துச் செலவுகள் அதிகரிப்பு போன்ற கடுமையான பாதிப்புகள் ஏற்படக்கூடும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# தந்தை செல்வாவின் ஜனன தினம் வவுனியாவிலும் நேற்று அனுஷ்டிப்பு



வவுனியா, ஏப். 01

தந்தை செல்வாவின் 128ஆவது ஜனன நிகழ்வு வவுனியா மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் உள்ள அவரது நினைவுத் தூபியில் நேற்று இடம்பெற்றது.

தமிழரசுக் கட்சியின் வவுனியா கிளையினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் அன்னாரது சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது அவர் தொடர்பான நினைவுரைகளும் ஆற்றப்பட்டன.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், கட்சியின் மத்திய குழு உறுப்பினர் நா.சேனாதிராஜா மற்றும் உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பி னர்கள் கலந்துகொண்டனர். (அ)

# தேர்தல் ஆணைக்குழுவின் சேவைகளை இனி வீட்டிலிருந்தே பெறுவதற்கு வசதி!

கொழும்பு, ஏப். 01

தேர்தல் ஆணைக்குழுவின் சேவைகளை பொதுமக்கள் இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்வதற்காக 'ஈ-சேவை' (e-Service) எனும் புதிய டிஜிற்றல் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, பொதுமக்கள் இனி கிராம அலுவலர் அலுவலகங்களுக்கோ அல்லது மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கோ நேரில் செல்ல வேண்டிய அவசியம் இன்றி, eservices.elections.gov.lk என்ற இணையத்தளம் அல்லது வழங்கப்பட்டுள்ள கியூ.ஆர். குறியீட்டை (QR Code) ஸ்கான் செய்வதன் மூலம் தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.

இந்த இணைய நுழைவாயில் ஊடாக 2026ஆம் ஆண்டிற்கான தேருநர் இடாப்பில் புதிய பதிவுகளை மேற்கொள்ளுதல், வசிப்பிட முகவரி மாற்றங்களுக்கு விண்ணப்பித்தல் மற்றும் 18 வயது பூர்த்தியடைந்த புதிய வாக்காளர்கள் தமது பெயர்களைப் பதிவு செய்தல் போன்ற வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், 2015ஆம் ஆண்டு முதல் இதுவரையிலான வாக்காளர் பதிவுத் தகவல்களைத் தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் கையொப்பத்துடன் உத்தியோகபூர்வமாகப் பெற்றுக்கொள்ளவும், விசேட தேவையுடைய பிரஜைகள் வாக்களிப்பதற்கான விசேட தேவைகளை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கவும் இந்த தளம் வழிவகை செய்கிறது.

ஒவ்வொரு சேவைக்கும் தேவையான விரிவான அறிவுறுத்தல்கள் அந்தந்த இணையப் பக்கங்களிலேயே வழங்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் நாயகம் ரசிக பீரிஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# இலங்கைக்கு இந்தியா வழங்கிய ஆதரவு பிராந்தியக் கூட்டாண்மையின் வலிமை!

## பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா



கொழும்பு, ஏப். 01

உலகளாவிய எரிசக்தி விநியோகச் சங்கிலிகள் நெருக்கடியில் இருக்கும் சந்தர்ப்பத்தில், இலங்கைக்கான எரிபொருளை இந்தியா விநியோகித்தமையானது, பிராந்தியத்திற்குள் நிலவும் கூட்டாண்மை, நம்பிக்கை மற்றும் உடனடிப் பதிலளிப்பு ஆகியவற்றின் வலிமையை எடுத்துக்காட்டுவதாக பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திரா தெரிவித்துள்ளார்.

இந்தியாவை தளமாகக் கொண்டு செயல்படும் ஆங்கில தொலைக்காட்சி சேவை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய நிச்சயமற்ற கால கட்டத்தில் இலங்கைக்கு எரிபொருள் விநியோகம் தொடர்வதை உறுதி செய்வதில், பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான இந்தியா வழங்கிய காலந்தவறாத ஆதரவை பாராட்டுவதாகவும் பிரதி அமைச்சர் கூறினார் என, குறித்த இந்திய ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

மத்திய கிழக்கு மோதலால் ஏற்பட்ட கடுமையான எரிபொருள் பற்றாக்குறையைத் தணிப்பதற்காக 38 ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருளை இந்தியா அவசரகால உதவியாக வழங்கியது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க விடுத்த கோரிக்கையை ஏற்று, பிரதமர் மோடி எரிபொருள் விநியோகத்துக்கான நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்.

இந்த இவசரகால உதவியானது, நெருக்கடி காலங்களில் இந்தியாவின் முக்கிய பிராந்திய ஆதரவை எடுத்துக்காட்டுவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (அ)

# மின்சாரம், குடிதண்ணீரில் சிக்கனம் பேண அறிவுறுத்து

கொழும்பு, ஏப். 01

உலகளாவிய எரிசக்தி நெருக்கடி மற்றும் நாட்டில் நிலவும் வறண்ட வானிலையைக் கருத்திற் கொண்டு, மின்சாரம் மற்றும் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன சகல அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையில், வீதி விளக்குகள் தேவையற்ற நேரங்களில் ஒளிரவிடப்படுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, அதிகாலையில் தேவையற்ற முறையில் விளக்குகள் எரிவதைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பெருமளவு மின்சாரத்தைச் சேமிக்க முடியும் என குறிப்பிட்டுள்ளார்.

அரச அலுவலகங்களில் அவசியமற்ற மின்விளக்குகள் மற்றும் மின்விசிறிகளை அணைத்தல், மின்தூக்கி பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் ஒளிரும் விளம்பரப் பலகைகளின் நேரத்தைக் கட்டுப்படுத்துதல் போன்றவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளார்.

மேலும் வீடுகளில் தேவையற்ற மின் விளக்குகள் மற்றும் மின்விசிறிகளை அணைப்பதன் மூலம் தேசிய மின்சாரக் கட்டமைப்புக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

அத்துடன் சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீரை வாகனங்களைக் கழுவுதல் போன்ற அத்தியாவசியமற்ற தேவைகளுக்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

குறைந்த மழைவீழ்ச்சி காரணமாக நீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளதால், நீரை மிகவும் சிக்கனமாகப் பயன்படுத்துவது அவசியமாகும்.

"உலகளாவிய எரிசக்தி நெருக்கடி தணியும் வரை, ஒரு நாடாகவும் சமூகமாகவும் நாம் இந்தச் சேமிப்புத் திட்டத்திற்குப் பழகிக்கொள்ள வேண்டும். அரச துறை இதில் முன்மாதிரியாகச் செயற்பட வேண்டும் என்பதுடன், பொதுமக்களின் ஒத்துழைப்பும் இதற்கு மிகவும் இன்றியமையாதது" என அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# வலுசக்தி அமைச்சர் பதவி விலகவேண்டும்

## நாமல் ராஜபக்ஷ வலியுறுத்தல்



கொழும்பு, ஏப். 01

ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள வலுசக்தி அமைச்சர், எதிர்க்கட்சிகளின் கோரிக்கைகளுக்காகக் காத்திருக்காமல் தானாகவே முன்வந்து பதவி விலக வேண்டும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட நாமல் ராஜபக்ஷ, அரசாங்கமே முறைகேடுகளை ஒப்புக்கொண்டுள்ள நிலையில், பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டினார்.

குறைந்த விலையில் நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டதாக அமைச்சர்கள் கூறினாலும், அதனால் ஏற்படும் நட்டத்தை இறுதியில் பொதுமக்களே சுமக்கவேண்டியிருக்கும் என அவர் எச்சரித்தார்.

ஆளுங்கட்சியுடன் தொடர்புடைய எவருக்கும் ஊழலில் தொடர்பில்லை என முன்னர் கூறப்பட்டபோதிலும், தற்போது வலுசக்தி அமைச்சர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அந்த கூற்றுகளுக்கு முரணாக அமைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நகர்வுகள் குறித்துப் பேசிய அவர், ஜனநாயகக் கட்டமைப்பிற்குள் புதிய தலைமைத்துவங்கள் உருவாவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க மற்றும் அனுர குமார திஸாநாயக்க ஆகியோரின் தலைமையிலான அரசியல் சக்திகள் நாட்டின் அரசியல் களத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மூத்த அரசியல் தலைவர்களை ஓரம் கட்டுவது தவறு எனத் தெரிவித்த அவர், இளம் தலைவர்கள் உருவாவதற்கு அனுபவம் வாய்ந்த தலைவர்களின் வழிகாட்டல் அவசியம் எனத் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.04.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media